

(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 1(13).]

பாராளுமன்றத்தின்
1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

2025 மார்ச் 01, சனிக்கிழமை வெளியிடப்பட்டது

எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

(2025, மார்ச்12, புதன்கிழமை)

610/2025

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி எம். நிசாம் காரியப்பர்,— பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முன்னைய நிர்வாகங்களின் கீழ், அரசியல் நோக்கங்களுக்காகச் செயற்படுத்தப்பட்டதாகக் குறிப்பிடப்படும் இனத்துவக் கருதுகோள்களின் அடிப்படையில் சில உள்ளூர் அதிகார சபைகள் மற்றும் பிரதேச செயலகப் பிரிவுகள் நிறுவப்பட்டதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) புதிய பிரதேச செயலகப் பிரிவுகளைத் தாபிப்பதில் தற்போதைய அரசாங்கம் பின்பற்றும் தெரிவடிப்படைகள் யாதென்பதையும்;

(iii) புதிய பிரதேச செயலகப் பிரிவுகளைத் தாபிப்பதில் இன ஆக்கவமைவு ஓர் தெரிவடிப்படையாகக் கருதப்படுகின்றதா என்பதையும்;

(iv) உள்ளூர் அதிகார சபைகள் மற்றும் பிரதேச செயலகப் பிரிவுகளைத் தாபிப்பதில் இன அல்லது அரசியல் கருதுகோள்களை விட சனத்தொகை அடர்த்தி, புவியியற் காரணிகள் மற்றும் நிர்வாகச் சாத்தியவளம் (உத்தியோகபூர்வ பதிவுகளின் நிர்வாக மொழி உள்ளடங்களாக) போன்ற புறநிலைத் தெரிவடிப்படையாக அமைவதனை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2025 மார்ச் 15, சனிக்கிழமை
பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

குற்றச் செயல்களின் வரும்படிகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

2025 ஏப்ரல் 08, செவ்வாய்க்கிழமை

வாய்மூல விடைக்கான வினாக்கள்

276/2024

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்பவற்றில் ஊழியர்கள் சார்பாக புதிதாகத் திறக்கப்படும் கோப்புக்களின் எண்ணிக்கையை, பொருளாதார அபிவிருத்தியைக் கண்காணிக்கும் அளவீட்டு அலகாகப் பயன்படுத்த முடியும் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திற்குள், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்பவற்றில் புதிதாகத் திறக்கப்பட்ட கோப்புக்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) 2024 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் தொடக்கம் ஒவ்வொரு மாதமும் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்பவற்றில் புதிதாகத் திறக்கப்பட்ட கோப்புக்களின் எண்ணிக்கையை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்தகவல்கள் மாதத்தின் எத்திகதியில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

383/2025

கௌரவ ரோஹித அபேகுணவர்தன,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான டிப்போக்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி டிப்போக்களில் இலாபம் ஈட்டும் மற்றும் நட்டத்தில் இயங்கும் டிப்போக்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) நட்டத்தில் இயங்கும் டிப்போக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iv) போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்துகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) மேற்படி பேருந்துகளில் தற்போது சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள மற்றும் சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ள பேருந்துகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(vi) பேருந்துகள் சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(vii) இலங்கை போக்குவரத்துச் சபையின் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையிலுள்ள புகையிரத நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) தற்போது சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள மற்றும் சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ள புகையிரதங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) புகையிரதங்கள் சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) தற்போது சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள புதிய புகையிரதங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) இலங்கை புகையிரத திணைக்களத்தின் மொத்த ஊழியர் எண்ணிக்கை யாதென்பதையும்;

(vi) அந்தத் திணைக்களத்தின் அமய ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் நிரந்தர ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

424/2025

கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்தியலிங்கம்,— நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் வவுனியா நகருக்கான குடி நீர் விநியோகத் திட்டம், 2010-2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடைமுறைப் படுத்தப்பட்டதுடன், இத்திட்டத்திற்காக வயல் நிலங்கள், மேட்டுக் காணிகள், குடியிருப்புக்கள் மற்றும் மதத்தலங்கள் ஆகியன சுவீகரிக்கப்பட்டன என்பதையும்;

(ii) விவசாயிகள் மற்றும் காணி உரிமையாளர்களைப் பாதிக்காத வகையில், இது தொடர்பில் விவசாய அமைப்புகள், பிரதேச செயலாளர் மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை ஆகிய தரப்புகளுக்கு இடையே முத்தரப்பு ஒப்பந்தமொன்று 2013.11.05 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது என்பதையும்;

(iii) சுவீகரிக்கப்பட்டுள்ள காணிகளுக்குப் பதிலாக வழங்கப்பட்டுள்ள மாற்றுக் காணிகளுக்கு இதுவரையில் பூரண அளிப்புப்பத்திரங்களை வழங்குதல், முறையான நீர்ப்பாசன வசதிகள் மற்றும் உட்பிரவேசப் பாதைகளை நிர்மாணித்தல் மற்றும் புனரமைத்தல் ஆகியன மேற்கொள்ளப்படவில்லை என்பதையும்;

(iv) பாதிக்கப்பட்டுள்ள விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்த அங்கத்தவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் மேற்படி குடிநீர் விநியோகத் திட்டத்தின் கீழ் இதுவரையில் தொழில் வாய்ப்புகள் வழங்கப்படவில்லை என்பதையும்;

(v) அணைகளிலிருந்து வெளியேறும் மேலதிக நீரை கமநல அபிவிருத்தி திணைக்களத்துக்கு சொந்தமான, புனரமைக்கப்பட்டுள்ள குளங்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளை தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

427/2025

கௌரவ இம்ரான் மகரூப்,— நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையால் திருகோணமலை மாவட்டத்தில் குடிநீர் வழங்கப்பட்டுள்ள பிரதேசங்கள் மற்றும் குடிநீர் வழங்கப்படாதுள்ள பிரதேசங்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) குச்சவெளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட குச்சவெளி, புடவைக்கட்டு, திரியாய் மற்றும் சலப்பையாறு போன்ற பிரதேசங்களுக்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் மூலம் குடிநீர் வழங்கப்படாததால், அந்தப் பிரதேசங்களில் வசிக்கும் சுமார் 5000 குடும்பங்கள் குடிநீரைப் பெறுவதில் கடும் சிரமங்களை எதிர்கொண்டிருப்பதை அறிவாரா என்பதையும்;

(iii) மேற்படி பிரதேசங்களுக்கு துரிதமாக குடிநீரைப் பெற்றுக்கொடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) பொதுவாக திருகோணமலை மாவட்டத்தில் குடிநீர் வசதிகளை மேம்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2022.01.01 தொடக்கம் 2024.01.01 வரை கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவில் குடிநீர் விநியோகம் தடைப்பட்டிருந்த மணித்தியாலங்கள் எத்தனை என்பதையும்;

(ii) இவ்வாறு தடைப்பட்டமை மீது தாக்கம் செலுத்திய அடிப்படைக் காரணம் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

445/2025

கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஜீ.டீ. சூரிய பண்டார,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) முப்படைக்கான விசேட ஆட்சேர்ப்பு (இராணுவம்சார்) முறையின் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட படை வீரர்கள் பல்வேறு தொழில்களில் கடமை நிமித்தம் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்பதையும்;

(ii) இவர்கள் அந்த சேவைகளுக்கே தனித்துவமான சீருடைகளின்றி சிவில் உடையில் அல்லது வேலைக்கான உடை அணிந்து கடமையாற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அதற்கு உட்பட்டதாக இலங்கை கடற்படையின் தகவல் தொழில்நுட்ப பிரிவில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள 43 படை வீரர்களுக்கு சீருடைகள் அணியுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதால் சிக்கல் தோன்றியுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) விசேட ஆட்சேர்ப்பின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு இன்றளவில் சேவையிலுள்ள படைவீரர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) இவர்களுக்குரிய கடமைகள் மற்றும் உரித்தான சலுகைகள் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) சிவில் உடைக்கு மேலதிகமாக சேவைகளுக்கே தனித்துவமான சீருடைகளை இவர்கள் அணிய முடியுமா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், அதற்கான சந்தர்ப்பங்கள் யாவை என்பதையும்;

(v) இவர்களுக்கு உரிய அறிவுறுத்தல்கள்/சுற்றறிக்கைகள்/கட்டளைகள் யாரால் வழங்கப்படுகின்றன என்பதையும்;

(vi) நிறுவனத் தலைவரின் தற்றுணிபின்படி இவர்களை சீருடை அணியுமாறு கட்டளையிட முடியுமா என்பதையும்;

(vii) (அ)(iii) இல் குறிப்பிட்டுள்ளவாறு படைவீரர்கள் சேவைக்கான சீருடை அணிந்தவாறு கடமையில் ஈடுபடுகின்றனரா என்பதையும்;

(viii) இன்றேல், சிவில் அல்லது வேலைக்கான உடை அணிந்து கடமையில் ஈடுபடுகின்றனரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

569/2025

கௌரவ ரவீந்திர பண்டார,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்கு மீண்டும் வந்து பணிபுரிய வேண்டும் என்ற கடுமையான நிபந்தனையின் கீழ், வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் கலாநிதிப் பட்டம் அல்லது பிற உயர் கல்வியை நிறைவுசெய்வதற்காக சனாதிபதி நிதியத்திலிருந்து நிதி வழங்கப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) அதன்கீழ், 2005 ஆம் ஆண்டின் பின்னர் முன்னாள் சனாதிபதிகள், அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் பிள்ளைகள், உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு சனாதிபதி நிதியத்திலிருந்து நிதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அந்நிதி வழங்கப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகளின் பெயர்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) அத்தகையோரில் கலாநிதி பட்டம் பெற்று மீண்டும் நாடு திரும்பிய மற்றும் நாடு திரும்பாதோரின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது என்பதையும்;

(v) இலங்கைக்கு மீண்டும் திரும்பாத நபர்கள் குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(vi) இவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vii) இவர்களுக்காக அரசாங்கத்தால் செலவிடப்பட்ட நிதி அறவிடப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

570/2025

கௌரவ வருண லியனகே,— கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1995 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்ட இலங்கை சமுர்த்தி அதிகாரசபையானது, 2013 ஆம் ஆண்டு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களமாக மாற்றப்பட்டதையும், தற்போது அதில் சுமார் 25,000 ஊழியர்கள் பணியாற்றுகின்றனர் என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு கடந்த ஒரு வருட காலமாக ஓய்வூதியம் செலுத்தப்படுதல் நிறுத்தப்பட்டுள்ளதால் அவர்களும் அவர்களில் தங்கி வாழ்பவர்களும் பாரிய சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்;

(iii) தற்போதைய அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனத்தில், மேற்படி பிரச்சினைக்கு துரிதமாக தீர்வு வழங்கப்படுமென உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி ஊழியர்களுக்கு, தற்காலிக நடவடிக்கையாக பணிக்கொடையை நிறுத்திவைத்தேனும் ஓய்வூதியத்தை வழங்காமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) இதற்கு நிரந்தர தீர்வை வழங்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

574/2025

கௌரவ சானக மாதுகொட,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட அரச காணிகளுக்கான உறுதிகளை கொண்டிருப்பவர்களுக்கு அறுதி உறுதிகளை வழங்கும் வேலைத்திட்டம் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படுமா என்பதையும்;

(ii) மேற்படி வேலைத்திட்டத்தின் கீழ் இன்றளவில் வழங்கப்பட்டுள்ள அறுதி உறுதிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி வேலைத்திட்டத்தின் கீழ் அறுதி உறுதிகளை பெற்றுக்கொள்வதற்கு அரச காணிகளுக்கான உறுதிகளை வைத்திருப்போர் தமது உறுதிகளை சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்களுக்கு ஒப்படைத்துள்ளமையை அறிவாரா என்பதையும்;

(iv) பிரதேச செயலகங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள உறுதிகளை மீள வழங்கும் நடவடிக்கைகள் எவ்வாறு மேற்கொள்ளப்படும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

576/2025

கௌரவ தர்மப்பிரிய திசாநாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) க.பொ.த. (சா/த) மற்றும் க.பொ.த. (உ/த) பரீட்சைகளை இலக்காகக் கொண்டு நடாத்தப்படும் தனியார் வகுப்புகள் தொடர்பான ஒழுங்குறுத்தல்கள் காணப்படுகின்றதா என்பதையும்;

(ii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி தனியார் வகுப்புகளை நடாத்தும் ஆசிரியர்கள் மற்றும் அவர்களின் கல்வித் தகைமைகள் பற்றி அறிந்துள்ளாரா என்பதையும்;

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(v) இன்றளவில் பாடசாலை நாட்களில் மு.ப. 8.00 மணி தொடக்கம் பி.ப.2.00 மணி வரை க.பொ.த. (சா/த) மற்றும் க.பொ.த. (உ/த) பரீட்சைகளை இலக்காகக் கொண்டு தனியார் வகுப்புகள் நடாத்தப்படுகின்றமையை அறிவாரா என்பதையும்;

(vi) மேற்படி தனியார் வகுப்புகளை நடாத்துவது தொடர்பாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(vii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(viii) மேலே (v) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தனியார் வகுப்புகள் நடாத்தப்படுகின்றமையால் அரசாங்கப் பாடசாலைகளுக்கு ஏற்பட்டுள்ள பாதகமான தாக்கம் தொடர்பாக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

584/2025

கௌரவ அஜித் கிஹான்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிலாபம் பொது வைத்தியசாலை நீண்டகாலமாக அபிவிருத்தி செய்யப்படவில்லை என்பதையும்;

(ii) அதன் காரணமாக மேற்படி வைத்தியசாலைக்கு வருகை தரும் நோயாளர்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வைத்தியசாலையை சகல வசதிகளையும் கொண்ட வைத்தியசாலையாக மாற்றியமைப்பதற்கான வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அந்த வேலைத்திட்டம் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2025 ஏப்ரல் 09, புதன்கிழமை

வாய்மூல விடைக்கான வினாக்கள்

484/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்துள்ள அரபிக் கல்லூரிகளில் சேவையாற்றும் ஆசிரியர்களுக்கு முறையான பயிற்சிகளை வழங்குவதற்கான பயிற்சி நிலையமொன்று இல்லையென்பதையும்;

(ii) அதன் காரணமாக கற்பித்தல் நடவடிக்கைகளுக்குரிய முறையான பயிற்சிகளைப் பெற்றுக் கொள்வதற்கான இயலுமை இல்லையென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) முஸ்லிம் பள்ளிவாசல்களில் சேவையாற்றும் இமாம்களுக்கும், முஅத்தின்களுக்கும் முறையான பயிற்சிகளைப் பெற்றுக் கொள்வதற்கான பயிற்சி நிலையமொன்று இல்லையென்பதையும்;

(ii) அதன் காரணமாக அவர்கள் ஆற்றும் பணிகளுக்கான முறையான பயிற்சிகளைப் பெற்றுக் கொள்ளும் இயலுமை இல்லையென்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) அரபிக் கல்லூரிகளில் சேவையாற்றும் ஆசிரியர்கள் மற்றும் முஸ்லிம் பள்ளிவாசல்களில் சேவையாற்றும் இமாம்கள் மற்றும் முஅத்தின்களுக்கு முறையான பயிற்சிகளை வழங்குவதற்கான பயிற்சி நிலையமொன்றை அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

497/2025

கௌரவ (பேராசிரியர்) சேன நாணாயக்கார,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இன்றளவில் காணப்படும் கலாசார நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(ii) கலாசார அலுவல்களின் மேம்பாட்டுக்காக மேற்படி கலாசார நிலையங்களினால் மேற்கொள்ளப்படும் பிரதான பணிகள் யாவை;

(iii) மாகாண கலாசார திணைக்களத்தின் கீழ் காணப்படும் கலை நிறுவனங்களின் எண்ணிக்கை யாது;

(iv) மேற்படி கலை நிறுவனங்களின் பணிகள் யாவை;

(v) பதிவு செய்யப்பட்டிருந்தும் தற்போது இயங்காத நிலையில் காணப்படும் கலை நிறுவனங்கள் உள்ளனவா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2024 ஆம் ஆண்டில் பிரதேச செயலகங்களினால் நடாத்தப்பட்டுள்ள வருடாந்த இலக்கிய விழாக்களுக்காக அரசாங்கம் செலவிட்டுள்ள மொத்தப் பணத்தொகை யாது;

(ii) இலக்கிய விழாக்களுக்காக ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பணத்தொகை வெவ்வேறாக யாது;

(iii) மேற்படி பணத்தொகை போதுமானதாக உள்ளதா;

(iv) இன்றேல், இது தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

499/2025

கௌரவ அநுராத ஜயரத்ன,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இஸ்ரேல் அரசாங்கத்தால் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள வேலைவாய்ப்புகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி வேலைவாய்ப்புகளின் எண்ணிக்கை விவசாயத்துறை, நிர்மாணத்துறை, ஹோட்டல் துறை மற்றும் உற்பத்தித்துறை ஆகிய ஒவ்வொரு துறை வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) இன்றளவில் இஸ்ரேல் நாட்டுக்கு வேலைவாய்ப்புகளுக்காக அனுப்பப்பட்டுள்ள இலங்கையர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) சகல பரிசோதனைகளிலும் சித்தியடைந்து, மருத்துவ அறிக்கைகளையும் பெற்றுக் கொண்டு, அண்ணளவாக ஒரு வருடம் கடந்துள்ள போதிலும், இதுவரை சுமார் 2400 விண்ணப்பதாரர்கள், வேலைவாய்ப்புகளுக்கு இஸ்ரேல் நாட்டுக்கு அனுப்பப்படாதுள்ளமையை அறிவாரா என்பதையும்;

(v) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(vi) இஸ்ரேல் நாட்டின் தொழில் வாய்ப்புகளுக்கு அவர்களை துரிதமாக அனுப்புவதற்கு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

513/2025

கௌரவ பத்மசிறி பண்டார,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள குளங்களில் தற்போது புனரமைப்பு செய்யப்பட வேண்டிய நிலையிலுள்ள குளங்களின் எண்ணிக்கை எத்தனை;

(ii) மேற்படி குளங்களை புனரமைப்பு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா;

(iii) அவ்வாறாயின், மேற்படி புனரமைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

515/2025

கௌரவ (டாக்டர்) நஜீத் இந்திக்க,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் வடக்கு மாகாணத்தில் இடம்பெறும் இறந்தவர்களை நினைவுகூறும் நினைவேந்தல் நிகழ்வுகள் தொடர்பில் சமூக ஊடகங்களில் அரசாங்கத்திற்கு அவப்பெயரை ஏற்படுத்தும் வகையில் பிராச்சாரங்கள் மேற்கொள்ளப்படுவதை அறிவாரா;

(ii) சமூக ஊடகங்களில் ஒழுங்கமைக்கப்பட்ட விதத்தில் இனவாதம், மதவாதம் மற்றும் வெறுப்புணர்வு கூற்றுக்கள் வெளியிடப்படுவதற்கு எதிராக தற்போது நடைமுறையிலுள்ள சட்ட ஏற்பாடுகள் யாவை;

(iii) இச்சட்டங்களில் கடந்த காலத்தில் அதிகமான சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்பட்ட சட்டங்கள் யாவை;

(iv) ஊடகங்களில் உண்மைக்குப் புறம்பான விடயங்கள் பிரச்சாரம் செய்யப்பட்ட பின்னர் இவற்றின் உண்மை நிலை தொடர்பாக அரசாங்கத்தினால் முன்வைக்கப்படும் விளக்கங்கள் விரைவாக பிரச்சாரம் செய்யப்படாமையினால் ஏற்படக்கூடிய இழுக்கினை தடுத்து நிறுத்துவதற்கு ஏதேனும் வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதா;

(v) இந்நிலையை நிவர்த்தி செய்வதற்கும் எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகள் மீண்டும் ஏற்படாமலிருப்பதற்கும் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2025 ஏப்ரல் 10, வியாழக்கிழமை

வாய்மூல விடைக்கான வினாக்கள்

10/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி பாடசலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி தேசிய பாடசாலைகளில் உரிய தகைமைகளை பூர்த்தி செய்துள்ள அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ள தேசிய பாடசாலைகளும் அவ்வாறில்லாத தேசிய பாடசாலைகளும் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) இவ்வாறான நிலைமையில் தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கையை அதிகரித்துள்ள போதிலும், உரிய தகைமைகளை பூர்த்தி செய்துள்ள அதிபர்கள் இல்லாதிருக்கும் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

71/2024

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின், போரதீவுபற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பக்கிளல்ல வீதி, வில்லுகுளம் வீதி மற்றும் அம்பிலான்துறை வீதி ஆகியன பிரதான ஒருங்கிணைந்த வீதிகள் என்பதையும்;

(ii) கடந்த காலங்களில் பல புதிய வீதிகள் நிர்மாணிக்கப்பட்டபோதிலும், மேற்படி வீதிகள் இற்றைவரை புனரமைக்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி வீதிகளை புனரமைப்பதற்கு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

93/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது சந்தையில் அரிசிக்கு கடும் தட்டுப்பாடு நிலவுவதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) தற்போது நாட்டில் நுகர்வுக்குப் போதுமானளவு அரிசி கையிருப்பில் உள்ளதா என்பதையும்;

(iv) பிரதான அரிசி ஆலை உரிமையாளர்கள், அரிசி ஏகபோகத்தை பேணிச்செல்கின்றனர் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(v) நெல் விவசாயிகளுக்கும், அரிசி நுகர்வோருக்கும் நிவாரணம் கிடைக்கப்பெறும் வகையில், அரிசியை மொத்த விற்பனை சந்தைக்கு விடுவிப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

212/2024

கௌரவ ரோஹண பண்டார,— பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் இன்றளவில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையானது ஒவ்வொரு பதவியின் அடிப்படையில் தனித்தனியே யாதென்பதையும்;

(ii) இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் பதவி உயர்வுகள் மிகவும் மந்த கதியிலேயே வழங்கப்படுகின்றன என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(iii) பதவி உயர்வுகளை துரிதமாக வழங்குவதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) பொலிஸ் உத்தியோகத்தர்களின் சம்பளம் மற்றும் நலன்புரி வசதிகளை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

518/2025

கௌரவ ஜே.சீ. அலவத்துவல,— பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015.12.31 ஆம் திகதிக்கு முன் ஓய்வு பெற்ற அரசாங்க ஓய்வூதியதாரர்களுக்கு அக்ரஹார காப்புறுதி காப்பீடு கிடைக்கப்பெறாத போதிலும், 2016.01.01ஆந் திகதிக்குப் பின் ஓய்வு பெற்ற ஓய்வூதியதாரர்களுக்கு அக்ரஹார காப்புறுதி காப்பீடு கிடைக்கப்பெறுவதை அறிவாரா என்பதையும்;

(ii) அந்த அநீதியை நிவர்த்திசெய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iii) 1997 இல் நியமிக்கப்பட்ட பீ.சி. பெரேரா சம்பள ஆணைக்குழுவின் பரிந்துரைகள் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு மட்டுமே நடைமுறையில் இருப்பதை அறிவாரா என்பதையும்;

(iv) பெரும்பாலான ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்குப் பொருந்தும் வகையில் அந்தப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

541/2025

கௌரவ ஹர்ஷன ராஜகருணா,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புற்றுநோயாளிகளுக்கு வழங்கப்படும் Anastrazole என்ற மருந்து உட்பட பல அத்தியாவசிய மருந்துகள் மஹரகம தேசிய புற்றுநோய் நிறுவனத்தில் இல்லை என்பதையும்;

(ii) இதன் காரணமாக இலங்கையின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் நாளாந்தம் இந்நிறுவனத்திற்கு வரும் நோயாளர்கள் கடும் சிரமங்களை எதிர்நோக்குவதோடு, அவர்களுக்குத் திரும்பிச் செல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) அவ்வாறாயின், அந்தப் பிரச்சினையை விரைவில் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) கம்பஹா மாவட்டத்தின் மல்வதுஹிரிபிட்டிய பிரதேச வைத்தியசாலையில் இற்றைவரை பகல் வேளையில் மாத்திரமன்றி இரவு வேளையிலும் நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் சேவைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், பதிலாளர்கள் இன்றி மருத்துவப் பணியாட்டொகுதியினர் இடமாற்றம் செய்யப்பட்டதன் காரணமாக அந்தச் சேவைகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது என்பதையும்;

(ii) அதன் காரணமாக அந்த மருத்துவமனையில் சிகிச்சை பெறுவதற்காக வரும் நோயாளிகள் மிகுந்த சிரமத்திற்கு இலக்காகி உள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஈ) இப்பிரச்சினையை விரைவில் தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

572/2025

கௌரவ அதுல வெலதகொட,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை, திஸ்ஸமகாராம, லுணுகம்வெஹர, சூரியவெவ மற்றும் அம்பலாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவுகளை உடனடுத்து அமைந்துள்ள யானைகளை முகாமை செய்வதற்கான ஒதுக்குப் பிரதேசத்தில் சட்ட விரோதமான நிர்மாணங்களும் பயிர்ச்செய்கைகளும் உள்ளன என்பதையும்;

(ii) அது காட்டு யானைகளின் இருப்புக்கு பெருந்தடையாக உள்ளது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி சட்ட விரோதமான நிர்மாணங்கள் மற்றும் பயிர்ச்செய்கைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி சட்ட விரோத நிர்மாணங்கள் மற்றும் பயிர்ச்செய்கைகள் தொடர்பாக எடுக்கப்படும் குறுகிய கால மற்றும் நீண்ட கால நடவடிக்கைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி யானைகளை முகாமை செய்வதற்கான ஒதுக்குப் பிரதேசத்திற்கு வெளியே காணப்படுகின்ற குடியிருப்புகள் மற்றும் பயிர்ச்செய்கை நிலங்களுக்குள் காட்டு யானைகள் அத்துமீறி நுழைவதால் ஏற்படும் உயிர் மற்றும் பயிர்ச் சேதங்கள் உச்சம் கண்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், அக்காரணத்தால் இதுவரை இறந்த நபர்களின் எண்ணிக்கை மற்றும் காட்டு யானைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

579/2025

கௌரவ ரோஹினி குமாரி விஜேரத்ன,— மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் தற்போது வரை அரசாங்கத்தின் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் இதர நியதிச்சட்ட நிறுவனங்களில் கடமையில் ஈடுபட்டிருக்கும் போது பெண்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட பாலியல் மற்றும் இதர குற்றச் செயல்களில், அறிக்கையிடப்பட்டுள்ள பாலியல் மற்றும் இதர குற்றச் செயல்களின் எண்ணிக்கை ஆண்டுவாரியாக வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(ii) அவை தொடர்பாக இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அரச நிறுவனங்களில் பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற துன்புறுத்தல்களை தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் முறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

581/2025

கௌரவ லால் பிரேமநாத்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள அரச மருத்துவமனைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அரச மருத்துவமனைகளின் வகைப்படுத்தலின் பிரகாரம், ஒவ்வொரு வகையின் கீழ் வருகின்ற மருத்துவமனைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு வகையின் கீழும் மாத்தறை மாவட்டத்திலுள்ள மருத்துவமனைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மாத்தறை மாவட்டத்திலுள்ள ஆரம்ப மருத்துவ நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி நிலையங்களுக்கு உலக வங்கி கடன் மூலமாகவோ அல்லது வேறு விதமாகவோ 18 அவசர சிகிச்சைப் பிரிவுகள் (ETU) கொள்வனவு செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அவ்வருடம் யாதென்பதையும்;

(iv) அப்போது நிரல் சுகாதார அமைச்சுக்குப் பொறுப்பாக இருந்த அமைச்சர் யாரென்பதையும்;

(v) அப்பிரிவுகள் இதுவரை அவசர சிகிச்சைப் பிரிவுகளாக இயக்கப்படவில்லை எனின், அதற்கான தடை யாதென்பதையும்;

(vi) அப்பிரிவுகளை அவசர சிகிச்சைப் பிரிவுகளாக இயக்குவதற்கு மேற்கொள்ளப்படும் அடுத்ததகட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

603/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மினுவாங்கொடை, சனாதிபதி வித்தியாலயத்தில் நீச்சல் தடாகத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது;

(ii) மேற்படி நீச்சல் தடாகத்தின் நிர்மாணத்திற்கான மதிப்பீட்டுத் தொகை மற்றும் இதுவரையில் செலவு செய்யப்பட்டுள்ள தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(iii) செலவு செய்யப்படாமல் எஞ்சிய தொகை, அந்த கருத்திட்டத்திற்குரிய கணக்கில் வைப்புச் செய்யப்பட்டுள்ளதா;

(iv) அவ்வாறாயின், குறித்த கணக்கின் பெயர், கணக்கிலக்கம் என்பன வெவ்வேறாக யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நீச்சல் தடாகத்தை நிர்மாணிக்கும் ஒப்பந்ததாரர்/ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் என்ன;

(ii) அத்தகைய ஒப்பந்ததாரர்கள்/ ஒப்பந்த நிறுவனம் தெரிவு செய்யப்பட்ட அடிப்படை யாது;

(iii) இன்றளவில் நிர்மாணப் பணிகளில் நிறைவு செய்யப்பட்டுள்ள அளவு யாது;

(iv) நிர்மாணப் பணிகளை முழுமையாக நிறைவு செய்வதற்கு எடுக்கும் காலம் எவ்வளவு;

(v) மேற்படி நிர்மாணப் பணிகள் தாமதமடைவதற்கான காரணங்கள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2025 ஏப்ரல் 11, வெள்ளிக்கிழமை

வாய்மூல விடைக்கான வினாக்கள்

133/2024

கௌரவ சட்டத்தரணி சித்ரால் பெர்னாந்து,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கையின் நீதிமன்றக் கட்டமைப்பில் விசாரணையிலுள்ள ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட மற்றும் பத்து வருடங்களுக்கு மேற்பட்ட குடியியல் வழக்குகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(ii) வழக்கு விசாரணைகளை நிறைவு செய்வதில் ஏற்படுகின்ற தாமதத்தைத் தவிர்ப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

153/2024

கௌரவ அஜித் பி. பெரேரா,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள காற்றாலை மின்னுற்பத்தி நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி காற்றாலை மின்னுற்பத்தி நிலையம் ஒவ்வொன்றினதும் நிர்மாணப் பணிகள் தொடங்கப்பட்ட ஆண்டு வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி காற்றாலை மின்னுற்பத்தி நிலையம் ஒவ்வொன்றினதும் கொள்ளளவு (Installed Capacity) வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) 2022ஆம் ஆண்டு தொடக்கம் 2024ஆம் ஆண்டு வரை மேற்படி ஒவ்வொரு காற்றாலை மின் உற்பத்தி நிலையத்தின் மூலமாக தேசிய மின்சாரக் கட்டமைப்புடன் சேர்க்கப்பட்டுள்ள வலுசக்தியின் அளவு ஒவ்வோர் ஆண்டுவாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) இலங்கையில் காற்றாலை மூலமான மின் உற்பத்தியை அதிகரிக்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

156/2024

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேகர,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024 நவம்பர் மாதத்தில் எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பு, வேறேதேனும் அமைப்பு, எவரேனும் நபர் அல்லது நபர்கள் வடக்கு – கிழக்கு யுத்தத்தில் உயிரிழந்த எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பின் உறுப்பினர்களை நினைவுகூரும் வகையில் மாவீரர் நினைவேந்தல்களை நடாத்தியுள்ளார்களா;

(ii) ஆமெனில், அவற்றை நடாத்திய தரப்பினர்கள் யாவர்;

(iii) அதற்கு அரச அனுசரணை வழங்கப்பட்டுள்ளதா;

(iv) மேற்படி நினைவேந்தல்கள் நடாத்தப்படுவதற்கு முன்னர் அது தொடர்பில் அரசாங்கம் அறிந்திருந்ததா;

(v) இலங்கையில் மாத்திரமன்றி சர்வதேச ரீதியாகவும் தடை செய்யப்பட்டுள்ள அமைப்பொன்றுக்கு இலங்கையில் அவ்வாறான நினைவேந்தல்களை நடாத்தும் இயலுமை உள்ளதா;

(vi) மேற்படி நினைவேந்தல்கள் நடாத்தப்படுவதை நிறுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது;

(vii) தடை செய்யப்பட்ட ஓர் அமைப்பு நினைவேந்தல் நடாத்தியமை தொடர்பில் அரசு பொறுப்பினை ஏற்றுக்கொள்கின்றதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

192/2024

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை சுகாதார அமைச்சுக்கும், அதன் கீழுள்ள நிறுவனங்களுக்கும் கிடைக்கப்பெற்ற நிதியுதவிகள் மற்றும் நிதியல்லாத உதவிகளின் அளவு ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் அறிக்கையின் படி, அவை சரியான முறையில் கணக்கு வைக்கப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

277/2024

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தெஹிவளை பிரதேச செயலகப் பிரிவில் மகளிர் தேசிய பாடசாலையொன்று உள்ளதுடன், குறித்த பிரிவில் ஆண்கள் தேசிய பாடசாலையொன்றை ஆரம்பிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், தேசிய பாடசாலையாக மாற்றப்படுவதற்கு மேற்குறிப்பிட்ட பிரிவில் அடையாளம் காணப்பட்டுள்ள பாடசாலை யாதென்பதையும்;

(iii) மேற்படி பாடசாலைக்கு வழங்கப்படவுள்ள வசதிகள் யாவையென்பதையும்;

(iv) அத் தேசிய பாடசாலை ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

306/2024

கௌரவ ரவி கருணாநாயக்க, — நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மொத்தப் பெறுமதியை இலங்கை ரூபா (SLR) மற்றும் ஐக்கிய அமெரிக்க டொலர்களிலும் (USD) மற்றும் கடந்த 20 வருடங்களுக்கான வளர்ச்சி வீதம் யாதென்பதை வெவ்வேறாகவும்;

(ii) எதிர்வரும் 5 வருடங்களுக்கு எதிர்பார்க்கப்படும் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி மற்றும் கணிப்பிடப்பட்ட வளர்ச்சி வீதம் யாதென்பதை வெவ்வேறாகவும்;

(iii) கடந்த 20 வருடங்களுக்கான ஏற்றுமதிகளின் மொத்தப் பெறுமதியை இலங்கை ரூபா மற்றும் ஐக்கிய அமெரிக்க டொலர்களிலும் மற்றும் மொத்தத் தேசிய உற்பத்தியில் அதன் சதவீதம் யாதென்பதை வெவ்வேறாகவும்;

(iv) இலங்கையில் முதல் 20 இடங்களில் காணப்படும் ஏற்றுமதிப் பண்டங்கள் யாதென்பதையும்;

(v) கடந்த 10 ஆண்டுகளாக சேவைகளிலிருந்து கிடைக்கப் பெற்ற மொத்த வருமானத் தொகை ஐக்கிய அமெரிக்க டொலர்களின் யாதென்பதை வெவ்வேறாகவும்;

(vi) இலங்கைக்கு ஐக்கிய அமெரிக்க டொலர்களை ஈட்டித்தந்த முதல் பத்து சேவைத் துறைகள் யாதென்பதை வெவ்வேறாகவும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வெளிநாடுகளில் வைக்கப்பட்டுள்ள சம்பாதிக்கப்பட்ட ஐக்கிய அமெரிக்க டொலர்களின் தொகை யாதென்பதையும்;

(ii) வெளிநாடுகளில் ஐக்கிய அமெரிக்க டொலரினை உத்தியோகபூர்வமாகத் தக்கவைத்துக்கொள்வதற்கான சட்டரீதியாக அனுமதிக்கப்பட்ட காலஎல்லை யாதென்பதையும்;

(iii) செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளை மீறி வெளிநாடுகளில் பணத்தை தக்கவைத்திருக்கும் தனியாட்கள் அல்லது நிறுவனங்களுக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு மேலும் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

335/2024

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்,— நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் மாவட்டத்தில் கட்டுபொத்த 'குரக்கன்ஹேனேகெதர குடிநீர் கருத்திட்டம்' என்ற பெயரில் சமுதாய நீர்வழங்கல் கருத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தின் பூர்வாங்கப் பணிகளுக்காகச் செலவிடப்பட்ட தொகை யாதென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

(iv) மேற்படி பிரதேசத்திலுள்ள வைத்தியசாலையையும், குரக்கன்ஹேனேகெதர, சபுமல்புரய, தங்கொல்ல மற்றும் கட்டுபொத்த ஆகிய பிரதேசங்களிலுள்ள 700 இற்கும் மேற்பட்ட குடும்ப அலகுகளிலுள்ள மக்களை உள்வாங்கும் வகையில் மேற்படி கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதை அறிவாரா என்பதையும்;

(v) தற்போது மேற்படி கருத்திட்டம் முழுமையாக செயலிழந்துள்ளமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(vi) மேற்படி கருத்திட்டத்தைத் துரிதமாக நடைமுறைப்படுத்தி மேற்குறிப்பிடப்பட்ட மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(vii) ஆமெனில், அது ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

432/2025

கௌரவ அஜித் கிஹான்,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் சட்டரீதியான உரிமங்களின் கீழ் மேற்கொள்ளப்படும் மணல், சரளைக் கற்கள், மண் மற்றும் குளங்களை அகழ்தல் போன்ற நடவடிக்கைகள் தரநிலைகளுக்கு புறம்பாக மேற்கொள்ளப்படுவதால் அதிகளவிலான சுற்றாடல் அழிவுகள் இடம்பெற்று வருகின்றமையை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி அகழ்வு நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்கான முறையியல் ஒன்று உருவாக்கப்படுமா என்பதையும்;

(iii) மணல், சரளைக் கற்கள், மண் மற்றும் குளங்களை அகழ்தல் போன்ற நடவடிக்கைகளுக்காகவும் மற்றும் அதற்கான போக்குவரத்து அனுமதிப்பத்திரங்களை வழங்குவது தொடர்பாகவும் புதிய முறையியலொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அந்த முறையியல் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வடமேல் மாகாணத்தில் பாரிய அளவில் சுற்றாடல் அழிவுக்குள்ளாக்கப்பட்டு வரும் நிலையில் வடமேல் மாகாண சுற்றாடல் அதிகாரசபையின் தலையீடுகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி அதிகாரசபையின் பொறுப்புக்கள் யாவையென்பதையும்;

(iii) வடமேல் மாகாண சுற்றாடல் அதிகாரசபையை தொடர்ந்தும் நடாத்திச்செல்ல வேண்டிய தேவை உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

560/2025

கௌரவ சாமர சம்பத் தசநாயக்க,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் தற்போதைய இராணுவத் தளபதியும் விமானப்படைத் தளபதியும் நியமிக்கப்பட்டுள்ள வழிமுறை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) இராணுவத் தளபதி மற்றும் விமானப்படைத் தளபதி பதவிகளுக்கான நியமனங்களுக்கு, தற்போதைய இராணுவத் தளபதியையும் விமானப்படைத் தளபதியையும் விட சிரேஷ்ட மற்றும் தகுதியான அதிகாரிகள் இருக்கவில்லையா என்பதையும்;

(iii) மூப்புரிமையும் தகைமையும் கொண்ட வேறு அதிகாரிகள் இருந்திருப்பார்களாயின், அந்த அதிகாரிகளைப் புறக்கணித்து தற்போதைய இராணுவத் தளபதியையும் விமானப்படைத் தளபதியையும் நியமிப்பதற்கான காரணங்கள் வெவ்வேறாக யாது என்பதையும்;

(iv) இராணுவத் தளபதிகளை நியமிக்கும்போது, மூப்புரிமையைத் தவிர கவனத்திற்கொள்ளப்படும் வேறு ஏதும் அளவுகோல்கள் உள்ளனவா என்பதையும்;

(v) அவ்வாறாயின், அத்தகைய அளவுகோல்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

617/2025

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை இலங்கையிலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைப் பெற்றுக்கொண்ட நோயாளர்களின் எண்ணிக்கை ஆண்டுவாரியாக வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி காலப்பகுதியில் அரசாங்க வைத்தியசாலைகளில் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவுகளை அபிவிருத்தி செய்வதற்கு செலவிடப்பட்ட தொகை ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) இலங்கையில் சுகாதார சுட்டிகள் உயர் பெறுமானத்தை அடைவதற்கு வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவுகள் பாரிய பங்களிப்பை வழங்கிவருவதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) மேற்படி பிரிவை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?